RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22214

OPEN ACCESS

# புறநானூற்றுப் பாடல்களில் புலவர்களின் ஆளுமை

ச. சுபாஷ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்- 610005, தமிழ்நாடு, இந்தியா

# The personality of the poets in the Purananuru

S. Subash [a, *]

[a] Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur–610005, Tamil Nadu, India

* Corresponding Author: subashs@cutn.ac.in

Received: 10-01-2022
Revised: 01-03-2022
Accepted: 15-03-2022
Published: 26-04-2022

Check for updates

**ABSTRACT**

Sangam literature is a time mirror that reflects life events in languages in which the heroism and generosity of four hundred kings have been described. From time immemorial, the Guru has been revered as a deity after his mother and father as the Guru's deity. The idea that only the Guru can heal the family, the student, and the country has been around. In Sanskrit literature, poets had the right to rebuke the king and to give him loving advice to make the country prosperous for the good of a king. In the late nineteenth century, poets primarily portrayed the heroism and generosity of kings through their songs. Not only male poets but also female poets excelled in this. Songs sung by individual poets All the songs in this book are sung about public justice without being sung about anyone There are hundreds of poets who mention the names of poets but also mention the names of kings.

**Keywords:** Sangam literature, Purananuru, Poets, Personality

## முன்னுரை

புறப்பொருளைப் பற்றிச் சொல்லும் 400 பாடல்களைக் கொண்டது புறநானூறு. கண்ணால் பார்த்தவற்றில் இருக்கும் ஒழுக்கமுடைய நிகழ்ச்சிகளைக் கூறுவது புறப்பொருள். தமிழ் இலக்கியத்தின் அணையா விளக்காகப் புறநானூற்று நூல் திகழ்கின்றது பழங்காலக் கருவூலம் என்றும் அழைக்கப்படுகிறது. பண்டைய தமிழர்களின் பண்பாட்டு சேமிப்பும் எட்டுத்தொகை நூல்களில் இதற்கு இணையாக மற்றொரு நூல்களைச் சொல்ல முடியாது. இந்த நூலின் மூலமாகப் பழந்தமிழர்களின் வாழ்க்கை வரலாறுகள் பலவற்றை அறியமுடிகிறது. தமிழ் மக்களின் சிறந்த சமுதாய வாழ்வு, விருந்தோம்பலின் சிறப்பு, உயர்ந்த ஒழுக்கம், உறுதியான கொள்கை, தன்னலமற்ற தியாகம், தலைநிமிர்ந்த தன்மான, வீர வாழ்வு இவைகளைப் பற்றி எல்லாம் இன்னும் சிறப்பாகக் கூறியிருக்கின்றது (Suja, 2020). பண்டைய தமிழ் மக்களின் வரலாற்று நூல் என்று புறநானூற்றைச் சொன்னால் அது மிகையாகாது (Kalathi, & Suresh, 2021).

தனித்தனிப் புலவர்களால், தனித்தனி மக்கள் மேல் பாடப்பட்ட பாடல்கள் இந்நூலில் இருக்கும். பாடல்கள் அனைத்தும் யாரையும் குறித்துப் பாடாமல் பொது நீதி குறித்துப் பாடியிருக்கும் பாடல்களும் புறநானூற்றில் இருக்கின்றன. புலவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டிருந்தாலும், மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிட்டிருந்தாலும் மக்களின் தனிமனிதப் பெயர்களையும், தனிமனிதச் சூழ்நிலைகளைக் குறிக்காமல் இயற்கையின் வர்ணனைகளோடு மக்களின் நிலைமைகளையும், அரசர்களின் போர் ,வீரம், கொடை, பண்பு, ஈகை, ஒழுக்க நெறி முறைகளையும், அழகாகப் புலவர்கள்

வெளிப்படுத்தியுள்ளனர். இதுவே புலவர்களின் சிறந்த ஆளுமைக்கு ஒரு சான்றாகும். இதனைப் பற்றி விரிவாக இக்கட்டுரையில் காண்போம்.

## புலவர்களின் காலங்கள்

சங்க காலம் என்பது பண்டைய தென்னிந்திய வரலாற்றில் நிலவிய தமிழகம் தொடர்பான ஒரு காலப்பகுதியாகும். இக்காலப்பகுதி கி.மு ஆறாம் நூற்றாண்டில் இருந்து கி.பி இரண்டாம் நூற்றாண்டு வரை நீடித்திருந்தது. மதுரையை மையமாகக் கொண்டு தமிழ்ப்புலவர்கள் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தனர் என்ற காரணத்தால் இக்காலப்பகுதிக்கு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி

மாங்குடி மருதன் தலைவன் ஆக,

உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்

புலவர் பாடாது வரைக, என் நிலவரை;" -- (Puliyur Kesikan, 2010)

என்று பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாடியுள்ள புறநானூற்றுப் பாடல் வரிகளே இத்தகைய புலவர்கள் கூட்டம் இருந்ததற்குச் சான்றாகும்.

## உலக வாழ்க்கையின் இயல்பு கூறுதல்

உலக வாழ்க்கை இன்பம்-துன்பம் என்னும் இரண்டும் கலந்தது. இருப்பினும் துன்பமே மனிதனை அதிகமாகப் பாதிப்புக்குள்ளாக்குகின்றது. உலக வாழ்க்கை துன்பமாக இருந்தாலும், இன்பமாக வாழ்வதற்கான இயல்பினைப் பெறுதல் வேண்டும் என்பது புலவர் பக்குடுக்கை நன்காணியாரின் எண்ணமாக இருப்பதனை,

“ஓர்இல் நெய்தல் கறங்க. ஓர்இல்

ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப

புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்

பைதல் உண்கண் பனிவார்பு உறைப்ப

படைத்தோன் மன்ற. அப் பண்பி லாளன்

இன்னாது அம்ம இவ்வுலகம்

இனிய காண்க இதன் இயல்பு உணர்ந்தோரே”- (Puliyur Kesikan, 2010)

என்னும் பாடல் எடுத்துரைக்கின்றது, ஒரு இல்லத்தில் துன்பமிக்க நெய்தல் பறையும், மற்றொரு வீட்டில் மணமுரசும் ஒலிக்கின்றன. தலைவனைச் சேர்ந்த மகளிர் அணிகலன்களும், பூக்களும் அணிந்தனர், பிரிந்தவர் கண்ணீர் வடிக்கின்றனர். இவ்வாறாக இருவேறாய்ப் படைத்த இறைவன் பண்பற்றவன், உலகத் துன்பம் கொடுமையானது. அதனால் இதன் இயல்பை உணர்ந்தோர் இனிமைதரும் இன்பத்தையே தேடுவார்கள் என்னும் கருத்து இப்பாடலில் உணர்த்தப்பட்டுள்ளது.

## நன்மை செய்யாவிடினும் தீமை செய்யாமலிருக்க வற்புறுத்தல்

பிறர்க்கு நன்மையினைச் செய்யாமல் போனாலும் பரவாயில்லை. ஆனால், அறம் அல்லாதனவற்றைச் செய்வதைக் கைவிடுவீர்களாக! அதுவே எல்லோராலும் விரும்பத்தகும் அறமாகும் என்று நரிவெரூஉத்தலையார் என்னும் புலவர்,

“நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்

அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்

எல்லாரும் உவப்பது; அன்றியும்

நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே” (Puliyur Kesikan, 2010)

என்னும் பாடலில் வலியுறுத்துவதனைக் காணலாம்.

## ஒற்றுமையை வலியுணர்த்தும் புலவர்கள்

பழந்தமிழர் பண்பாடு மிக உயர்ந்தது உலகமெல்லாம் பாராட்டிப் பின்பற்றக்கூடிய தமிழ் மக்கள் உலகத்தை ஒன்றோடு ஒன்றாக கருதினர். உலக மக்களை ஒரே குலத்தவராக எண்ணினர். இத்தகைய உயர்ந்த நோக்கம் சங்ககாலப் புலவர்களின் பண்பாட்டுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். பொறாமையும் ஏமாற்றமும் நிலைத்தது என்று துன்பப்பட வேண்டியதுமில்லை.ஆகையால் சங்ககாலப் புலவர்கள் ஒற்றுமை உணர்வுடனும் ,ஒற்றுமையை வழியுணர்த்தும் எண்ணத்தில் பல குறுநில மன்னர்கள் மற்றும் புகழ்ப் பெற்ற அரசர்களுடை ஏற்படும் பூசல்களைத் தீர்த்து வைப்பார்காள். உலக மக்கள் யாவரையும் ஒன்றாகக் கருத வைக்கும் கணியன் பூங்குன்றனாரின் பாடல் சாதி, இன, சமயங் கடந்த ஒருமைப்பாடுடைய உலகை வலியுறுத்துகின்றது.

“யாதும் ஊரே; யாவரும் கேளிர்,

தீதும் நன்றும் பிறர்தர வாரா,

நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன,

சாதலும் புதுவது அன்றே,

வாழ்தல் இனிது என மகிழ்ந்தன்றும் இலமே,

முனிவின் இன்னாது என்றலும் இலமே

மின்னோரு வானம் தண்துளி தலைஇ ஆனாது

கல்பொருது இரங்கும்வ மல்லல் பேர்யாற்று

நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்

முறைவழிப் படூஉம் என்பது திறவோர்காட்சியின் தெளிந்தனம்

ஆதலின் மாட்சியின்

பெரியோரை வியத்தலும் இலமே,

சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே” (Puliyur Kesikan, 2010)

என்னும் பாடல் எடுத்துரைக்கின்றது. இதில் ‘எல்லா ஊரும் நம் ஊரைப் போன்றதே, எல்லா மனிதரும் நம் உறவினரே, தீமையும் நன்மையும் பிறர்தர வருவது இல்லை, நன்மையும் தீமையும் நாமே ஏற்படுத்திக் கொள்வது, அதற்காக வருந்துவது இல்லை, வாழ்க்கை இனிமையானது என்று எண்ணி இறுமாப்புக் கொள்வதில்லை, வாழ்க்கை துன்பமானது என்று வெறுப்பதும் இல்லை, நீர்வழிச் செல்லும் படகுபோல உயிரானது ஊழ்வினை சென்றவழியே செல்லும் என்ற சான்றோரின் குறிப்பால் உணர்ந்தோம், அதனால் பெரியோரைக் கண்டு வியப்பதும் இல்லை, சிறியோரைக் கண்டு இகழ்தலும் இல்லை’ என்று குறிப்பிடுவதனைக் காணலாம்.

“யாதானும் நாடாமால் ஊராமால் என் ஒருவன்

சாந்துணையும் கல்லாத வாறு” - (Manickanar, 2000)

என்ற திருக்குறளும் புறநானூற்றுப் பாடலின் கருத்தையே விளக்கிக் கூறுகின்றது. இதுபோன்ற உலகத்துக்கே பொதுவான நெறிமுறைகளை எடுத்துக்காட்டும் செய்யுள்களை வேறு எந்த நூலிலும் காணமுடியாது புறநானூற்றில் மட்டுமே இதன் சிறப்பு அமைந்துள்ளது (Balasubramanian, 2004).

 DOI: 10.34256/irjt22214

## அரசியலும் அரசனின் கடமைகளும்

நல்ல அரசியல் இல்லாவிட்டால் எந்த நாடும் நாசமடையும். நல்ல அரசியல் அமைப்பு உள்ள நாட்டில் தான் மக்கள் ஒன்றுபட்டு வாழ்வார்கள். மக்களுடைய வாழ்க்கைத் தரமும் உயர்ந்து இருக்கும். செல்வம் கொழிக்கும் சிறந்த நாடாக விளங்கும். இன்பமான வாழ்வுக்கு உதவும் எல்லாப் பொருள்களும் விளையும், இணையற்ற நாடாகத் திகழும். மக்கள் ஜாதி மத இனவெறி பாகுபாடின்றி ஒன்றுபட்டு வாழ்வார்கள். இந்த உண்மையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மக்கள் தெளிவாக அறிந்து இருந்தனர். அரசன் தன்னுடைய நன்மைக்காக ஆள்பவன் அல்ல, நாட்டின் நன்மைக்காக வாழ்பவன், குடி மக்களின் குறைகளைப் போக்குவதற்காக வாழ்பவன் என்ற கொள்கையை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் வலியுறுத்தி வந்தனர்.

குடி மக்களுக்காகத் தான் அரசு, குடி மக்களின் ஊழியன் தான் மன்னவன் என்ற கருத்து நிலைத்திருந்தது. இதனால்தான் பண்டைய தமிழ் மன்னர்கள் அநீதிக்கு அஞ்சினர். குடிமக்களின் எண்ணப்படி ஆட்சி செய்தனர். நீதிக்கும் நேர்மைக்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்தனர். உலகத்துக்கு உயிர் அரசுதான் என்பதைத் தமிழ் மக்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். உலகத்துக்கு நெல்லும் உயிர் அன்று, தண்ணீரும் உயிர் அன்று உலகம் மன்னனைத் தான் உயிராகக் கொண்டிருக்கின்றது. ஆகையால் மன்னன் தான் இவ்வுலகத்திற்கு உயிர் என்று அறிந்து அதற்குத் தகுந்த படி நடந்து கொள்வது வேள்படைகள் மிகுந்த சேனைகளையுடைய அரசனின் கடமை ஆகும்.

“நெல்லும் உயிர் அன்றே, நீரும் உயிர் அன்றே,

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;

அதனால், யான்உயிர் என்பது அறிகை

மேல் மிகுதானை வேந்தற்குக் கடனே”. (Puliyur Kesikan, 2010)

## அரசனுக்கு அறிவுரைக் கூறும் புலவர்கள்

பாண்டிய நாட்டின் மேற்குப் பகுதியில் கடும் வறட்சி, தண்ணீர்ப் பஞ்சம். குடிப்பதற்குக்கூட நீரின்றி மக்கள் வாடுகின்ற அவலமான சூழ்நிலை. இதற்கெல்லாம் காரணம் மன்னன் மக்கள் நலனில் அக்கறை காட்டாததே என்று மக்களுக்கு மன்னன்பால் கோபம்; ஆயினும் அதனை அவனிடம் எடுத்துச் சொல்வதற்கோ அவர்களுக்குத் துணிவில்லை. ஏனெனில் அப்போது மதுரையை ஆண்டவனோ பெருவீரர்; மிக இளம் வயதிலேயே அரசுக் கட்டில் ஏறி ஆட்சி செய்யத் தொடங்கிய பெருமைக்குச் சொந்தக்காரன். ஏழு அரசர்களைத் (தலையாலங்கானத்துப்) போர்க்களத்தில் தனியொருவனாய் வீழ்த்தி ’தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்’ என்ற அடைமொழியோடு ஆட்சி செய்பவன்.

எழுவரை வென்ற இளையோனாகிய அவனுடைய போர் வெற்றியைக் கண்டு வியந்த ‘இடைக்குன்றூர் கிழார்’ எனும் புலவர் ’இச்செழியனோ இப்போதுதான் காலில் அணிந்த கிண்கிணி (ஆண் குழந்தைகளுக்கு அணிவிக்கப்படும் கொலுசு) நீக்கி வீரக் கழல் அணிந்துள்ளான். இதுநாள்வரை பால் பருகிக் கொண்டிருந்தவன் இன்றுதான் முதன்முறையாகச் சோறு உண்டான்; அவன் வெற்றி வாழ்க!’ அத்தகைய மாவீரனிடம் பேசுவதற்கு யாரை அனுப்புவது என்று யோசித்துத் துணிவும், தமிழ்ப்புலமையும் ஒருங்கே கொண்ட புலவர் பெருந்தகையான ‘குடபுலவியனாரைத்’ தேர்ந்தெடுத்தனர் மக்கள்.

குடபுலவியனார் சொல்வன்மையும், அறிவு முதிர்ச்சியும் மிக்க தமிழ்ச்சான்றோர் ஆவார். மக்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு நெடுஞ்செழியனைக் காணச் செல்கின்றார் அவர். மன்னனிடம் செல்வாக்கு மிக்கவராய் அவர் விளங்கிய காரணத்தினால் எளிதில் அவனைக் காணக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. அந்த வாய்ப்பைச் சரியாய்ப் பயன்படுத்திக்கொண்ட அவர், மிகச் சிறந்த அறிவுரைகளை அரசனுக்கு வழங்குகின்றார். மேலுலகத்தில் நீ மறுமை இன்பத்தைப் பெற விரும்பினாலும் சரி, அல்லது பகைவர்கள் அனைவரையும் ஒழித்து இந்நிலவுலகிலே நீ ஒருவனே பேரரசனாய்ப் புகழ்பெற்று வாழ விரும்பினாலும் சரி அதற்கான தகுதி என்ன தெரியுமா? சொல்கிறேன்

கேள்! 'நீரின்றி அமையா இம்மானுட வாழ்வில் உணவு கொடுத்தவர்கள் உயிரைக் கொடுத்தவர்கள் ஆவர். உணவினால் ஆனதுதானே இம்மானுட உடம்பு! உணவெனப்படுவது நிலத்தொடு கூடிய நீர். (நிலத்திலிருந்து கிடைப்பது அரிசி உணவு; பருகுவதற்கு இன்றியமையாதது நீர்; ஆகவேதான் இப்புலவர் பெருந்தகை உணவெனப்படுவது நிலத்தொடு கூடிய நீர் என்கின்றார்.) எவனொருவன் நிலத்தையும் நீரையும் ஒன்றாகச் சேர்த்து வைக்கின்றானோ அவனே இவ்வுலகத்தின் உடம்பையும் உயிரையும் ஒன்றாய் இணைத்தவன் ஆகின்றான். ஆகவே, போரிலே பெருவிருப்பம் கொண்ட செழியனே! நீர்நிலைகளிலெல்லாம் நீண்ட கரையெடுத்து அந்நீரைத் தேக்கி வைத்தால் அப்போதுதான் உன்னுடைய புகழும், காலத்தை வென்று நிலைத்து வாழும் என்கின்றார்.

இப்புலவரின் அறிவுரை எல்லாக் காலத்திற்கும் பொருந்தக்கூடியதாகவே இருக்கின்றது. **'Conservation of water resources'** என்று நாம் இன்று பேசிக்கொண்டிருக்கிறோம். இதைத்தான் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே இப்புலவர் பாண்டிய நெடுஞ்செழியனிடம் வலியுறுத்துகின்றார். அவர் இந்த அறிவுரையை மன்னனுக்கு வழங்கி இருபது நூற்றாண்டுகள் கடந்த பின்னும்கூட அது இன்றுவரை சரியாகச் செயல்படுத்தப்படவில்லை என்பதே வரலாறு காட்டும் உண்மை. இன்றுவரை நம் தமிழகத்தில் போதிய அணைகள் கட்டப்படவில்லை. நீர் மேலாண்மையில் நாம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளோம் என்பதை வருத்தத்தோடு ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும். அற்புதமான கருத்துகளை அரசனுக்கு அறிவுறுத்திய 'குடபுலவியனாரின்' .

"............................................ வயவேந்தே
செல்லு முலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலங் காவலர் தோல்வழி முறுக்கி
ஒருநீ யாக்கல் வேண்டினுஞ் சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினு மற்றதன்
தகுதி கேளிர் மிகுதி யாள
நீரின் றமையா யாக்கை கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே யுணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரி யோரீ ண்டு
உடம்பு முயிரும் படைத்திசி னோரே
..............................................................

---

அடுபோர்ச் செழிய இகழாது வல்லே
நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம இவண்தட் டோரே
தள்ளாத் தோரிவண் தள்ளாத் தோரே. (Puliyur Kesikan, 2010)

## புலவர் வேந்தர்க்குக் கூறும் அறக்கருத்துகள்

வேந்தரிடம் பரிசில் பெற்ற புலவர்கள் பரிசிலுடன் வறிதே மீளாது தக்க அறிவுரைகளைக் கூறிச்செல்லுதல் சங்கமரபு. வேந்தனிடம் தவறு கண்டபொழுது தமக்குப் பரிசில் நல்கினனே எனத்

தாழ்ந்து விடாமல் தேவைப்படும் நேரத்தில் கடுமையாக அறிவுறுத்தும் நெஞ்சுரத்தையும் சிலபாடல்களில் காணமுடிகிறது. இம்மரபினை வள்ளுவர்,

“இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்

கெடுப்பா ரிலானுங் கெடும்” (Manickanar, 2000)

என்று குறிப்பிடுகின்றார்.

## முடிவுரை

மாதா பிதா குரு தெய்வம் என்று தாய் தந்தையர்க்குப் பின் குருவை வைத்ததற்குக் காரணம் வாழ்க்கையை நல்ல வழியில் அழைத்துச் செல்லும் தகுதி படைத்தவர்கள் என்பதற்காகத்தான். ஆகையால் புலவர்கள் வார்த்தைக்கு இணங்கி, நாட்டைக் காக்கும் அரசன் வாழ்ந்து வந்தான் என்ற நிகழ்வு புறநானூற்றுப் பாடல்களின் வழி நாம் அறிகின்றோம். தமிழ்ப் புலவர்களை, மன்னர்களும் செல்வர்களும் மதித்து வாழ்ந்தனர். புலவர்கள் அரசர்களுக்கும், பொதுமக்களுக்கும் அறிவுரை கூறி, மன்னர்கள் தவறு செய்தால் அதனைச் சுட்டிக் காட்டி, தவறுகளைத் தடுத்துத் நிறுத்தும் ஆற்றல் கொண்டவர்கள். அதுமட்டும் அல்லாமல் சிறந்த அரசியல் அறிவு படைத்தவர்களாக இருந்தனர் என்பதனைப் புறநானூற்று பாடல்கள் வழி நாம் அறிந்தாலும் புலவர்களின் சிறப்பு இன்றும் புகழக்கூடிய ஒன்றாகத்தான் இருக்கின்றது.

## References


Balasubramanian, Ku.Ve., (2004) Purananuru, New Century Book House, Chennai, India.

Kalathi, V., Suresh, R., (2021). A comparative approach to the Morality of Purananuru and Shi Jing. International Research Journal of Tamil, 3(4), 16-23. https://doi.org/10.34256/irjt2143

Manickanar, Va. Suba., (2000) Thirukkural, Saradha Pathippagam, Chennai, India.

Puliyur Kesikan, (2010) Purananuru, Saradha Pathippagam, Chennai, India.

Suja, S., (2020). Rhetoric in Purananuru, International Research Journal of Tamil, 2(4), 35-42. https://doi.org/10.34256/irjt2045



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License